RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s610

OPEN ACCESS

# சித்தர்களின் சமாதி ஆலயங்களும் ஆற்றல்களமும்

**இரா. முருகேசன் [அ, *], க. இராமபாண்டி [ஆ]**

[அ] தமிழ்த்துறை, ம.தி.தா. இந்துக் கல்லூரி, பேட்டை, திருநெல்வேலி-627010, தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] தமிழ்த்துறை, மணோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி, நாகம்பட்டி-628718, தமிழ்நாடு, இந்தியா.

# Siddhas' Tomb Shrines and the Power Fields

**R. Murugesan [a, *], K. Ramapandi [b]**

[a] Department of Tamil, MDT Hindu College, Pettai, Tirunelveli -627010, Tamil Nadu, India

[b] Department of Tamil, Manonmaniam Sundaranar University College, Nagampatti-628718, Tamil Nadu, India

* Corresponding Author: murugesanmukkani@gmail.com

Received: 03-09-2021
Revised: 18-04-2022
Accepted: 13-05-2022
Published: 15-07-2022

Check for updates

## ABSTRACT

It can be known from literature that monumental stone has been worshipped in the name of soldiers who died in war since the Sangam period. Tomb shrine worship is worshipping the body of a siddha in the tomb. In Tamil Nadu, the Siddhas studied the body and mind and learned the art of suppressing life with the body and attained immortality. The Siddhas indirectly said that the separation of life from the body is death, and the bio-condensation of life with the body is eternal. To achieve this, if one receives the Kundalini spiritual enlightenment properly from the spiritual educator and performs the proper exercises, the mind becomes compressed and the magnetic energy of the soul expands, and eventually one attains the supreme state of spiritual enlightenment. This state is known as spiritual enlightenment. The Siddhas, who have attained spirituality and have attained mmortality, should bury the bodies of the sages and worship them according to the rules of sacred writings (Agamas). It is called a tomb shrine. The sacred writings tell us how the place of burial, the environment, and the structure of the burial should be. Doing so will benefit the country. If their bodies are burned or neglected, evil will occur. The sacred writings say that if the body of a sage is left unburied and rots and is eaten by foxes, then the land will be destroyed by enmity in the country where it is eaten by foxes. The conclusion of the sacred writings is that the funeral rites and other activities performed for the dead should not be performed for the bodies of sages who have attained spiritual attainment and are considered to be the shrine where the Lord resides and is worshiped. A magnetic energy field is felt in the shrines where spiritual attainers are enshrined. Practitioners of kundalini enlightenment can easily feel that energy and experience ecstasy. Analysts believe that such energy fields cross borders, time zones, and languages and are parallel to one another.

**Keywords:** Sivakini, Agamas, Kundalini, Cave, Mantra

## முன்னுரை

வழிபடுதல் என்ற சொல்லுக்கு பூசைசெய்து வணங்குதல், பின்தொடர்தல் அல்லது பின்பற்றுதல் என்று பொருள் கொள்ளப்படுகிறது. ஒரு கருத்தியலையோ, சமயத்தையோ, குருநாதரையோ, தலைவனையோ வணங்குவது அல்லது பின்பற்றுவது வழிபாடு எனப்படுகிறது. சமூகத்தில்

போற்றுதலுக்குரிய வகையில் வாழ்ந்து மறைந்தவர்களுக்கு அவர்கள் மறைந்த இடத்தில் அவர்களின் பெருமைகள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களுடன் நினைவுச்சின்னம் எழுப்பி (நடுகல்) வழிபடும் முறை சங்ககாலம் தொட்டு இருந்து வந்திருக்கிறது.

போரில் இறந்த பகைவர் (நடு)கல்லாகி நின்றதாகத் திருவள்ளுவர்,

“என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை

முன்னின்று கல்நின்ற வர்.”

என்ற குறளில் பதிவுசெய்துள்ளார் (Thiruvalluvar, 2018). வீரம், தியாகம் முதலிய காரணங்களுக்காக நடுகல் அமைத்து வழிபடும் வழக்கம் பழந்தமிழரிடம் இருந்திருக்கிறது.

ஆனிரைப் போரில் வீழ்ந்துபட்ட வீரர்களுக்கு நடுகல்வழிபாடு செய்வதற்கான ஆறு நிலைகளை “காட்சி, கால்கோல், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்தல்” எனத் தொல்காப்பியம்-பொருளதிகாரம் கூறுகிறது (Tholkappiyar, 2005). இதன்மூலம் சங்க காலங்களில் நடுகல்வழிபாடு இருந்ததனை அறியலாம்.

ஆன்மீக ஆராய்ச்சியும், எழுச்சியும் மேலோங்கிய காலங்களில் திருமூலர் தொடங்கி இரமணர் வரையிலான எண்ணற்ற சித்தர்களும் ஞானிகளும் தோன்றியுள்ளனர். அவர்கள் உடலையும், மனதையும், ஆன்மாவையும் ஆய்வுசெய்து, உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு, கடவுளுக்கும் மனிதனுக்குமான தொடர்பு ஆகியவற்றை ஆராய்ந்தனர். இந்த உடலைப் பாதுகாத்து, உயிராற்றலைப் பெருக்கி, இறைநிலையை அடைவது என்ற கோணங்களில் ஆய்வுசெய்தனர். அதன்மூலம் பல அரிய நூல்களை உலகுக்கு அளித்துள்ளனர். மேலும் பின்வரும் சந்ததிகளுக்கு அந்த மெய்ஞானக் கருத்துக்களைக் கொண்டுசேர்க்கவும், இறைநிலையை அடையச் செய்யவும், குரு-சீடன் பரம்பரைகளை உருவாக்கி பின்தொடர்ச்சிகளை ஏற்படுத்தியுள்ளனர். இந்த உடல் வேறு உயிர் வேறாகப் பிரிவது மரணம். உடலானது தனது செயல்பாடுகளை நிறுத்திக்கொண்டாலும், இந்த உடலைவிட்டு உயிர் பிரியாமல் உடலிலேயே ஒடுங்கியிருத்தல் பிறப்பு இறப்பற்ற பெருநிலை என்று சித்தர் மரபில் கூறப்படுகிறது. திருமந்திரம் இந்நிலை பற்றி பின்வருமாறு கூறுகிறது.

“செத்தார் பெறும் பயனாவது ஏதெனில்

செத்துநீர் சேர்வது சித்தினைக் கூடிடில்

செத்தார் இருந்தார் செகத்தில் திரிமலம்

செத்தார் சிவமாகியே சித்தர் தாமே.”

மும்மலங்கள் எனப்படும் ஆணவம், கன்மம், மாயை ஆகியன அழிந்தவர்கள் அடையும் பயன் என்னவென்றால் அவர்கள் சித்தியடைவதாகும் (Manikkavasagan, 2008). சித்தி அடைந்தவர் இறந்தவராக மாட்டார். மும்மலங்களையும் சாகடித்தவர்கள் சிவமாகவே ஆவார்கள். அவர்கள் மரணமற்றவர்கள் என்று மேற்காணும் திருமந்திரம் கூறுகிறது. திருவருட்பா ஆறாம் திருமுறையில் ஞானசரியை என்னும் தலைப்பில் வரும் “நினைந்து நினைந்து” எனத்தொடங்கும் பாடலில்,

“மரணமில்லாப் பெருவாழ்வு

வாழ்ந்திடலாங் கண்டீர்

புனைந்துரையேன் பொய்புகலேன்

சத்தியம் சொல்கின்றேன்"

என்ற அடிகளில் மரணமற்ற முத்திநிலையை வள்ளலார் உறுதிபட அறிவிக்கின்றார் (Ramalinga Swamigal, 2012). இவ்வாறு பிறப்பு இறப்பற்ற முத்திநிலையை இந்த உடல் உள்ளபோதே அடைந்த ஞானியரை சீவன்முத்தர் என்று அழைப்பர். இத்தகைய சீவன்முத்தர்களின் உயிர் ஒடுக்கம்பெற்ற உடலை குகைசெய்து வழிபடுவது சித்தர் மரபாக உள்ளது. இவ்வழிபாட்டு முறை சமாதி ஆலய வழிபாடு என்று அறியப்படுகிறது. இம்முறை நடுகல் வழிபாட்டின் பின்தொடர்ச்சி போல்

காணப்பட்டாலும், சமாதி ஆலய வழிபாடு என்பது காந்த ஆற்றல் களத்தினை அடிப்படையாகக் கொண்டது ஆகும்.

## சமாதிக்குரியோர்

இறந்தவர்களைப் புதைப்பது, எரியூட்டுவது ஆகிய இருவழக்கங்களும் தமிழகத்தில் வெகுகாலமாக இருந்து வந்துள்ளன. பட்டிணத்தடிகள் கூட தமது தாயினுடைய உடலை வாழைமட்டையில் வைத்து எரியூட்டியதாக அவருடைய வரலாறு கூறுகிறது. ஆனால் அவருடைய சமாதி ஆலயம் சென்னை - திருவொற்றியூரில் அமைந்துள்ளது. வடவர்களுடைய ஆதிக்கத்தினால்தான் இந்த எரியூட்டும் வழக்கம் உருவானதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது. எவ்வாறாயினும் யாருடைய உடலை எரியூட்டுவது?, சமாதிக்குரியோர் யாவர்? என்பதை 'சமாதி லிங்கப் பிரதிட்டை விளக்கம்' என்ற நூல் கீழ்காணுமாறு விளக்குகிறது.

பரமவங்கிசன் (பெரிய சந்நியாசி) முதலான ஞானவான்கட்கும், சிவயோக நிலையில் இருப்பார்க்கும், மாந்திரிகட்கும், போற்றப்படுகின்ற தவ வலிமை உள்ளார்க்கும், வரம் தரத்தக்க எதிகட்கும்(சந்நியாசி), சிவாக்கினியை வயிற்றுத் தீயினிலே ஒடுக்கும் விதிடவித்துவர்களாகிய முத்திரையை விரும்புகின்ற எதீசுவரர்களுக்கும் (யோகிகளுக்கும்) சமாதி வைத்தல் வேண்டும். சிவாக்கினியை ஒடுக்காத (உயிர் ஒடுக்கமடையாத) விதிட வித்துவரரை அச்சம் தரத்தக்க தீயினால் சுட்டெரிக்க வேண்டும். மேற்கூறிய சமாதி, சுட்டெரித்தல் ஆகிய இரண்டிடத்தும் அவர்கள் தாங்கியிருந்த தண்டு, கோவணம் ஆகியவைகளுடன் அவைகளைச் செய்தல் வேண்டும். இக்கருத்துக்களைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

"பரமவங்கி சன்முதலாம் ஞானிகட்கும் யோகப்
பான்மையர்க்கும் மாந்திரிக்கும் பரவுதபோத னர்க்கும்
வரமதருள் தபோவெதிக்குஞ் சிவாக்கினியை யுதர
வன்னிதனி லேயொடுக்கும் விதுடவித்து வரராந்
திரமருவு மெதீசுரர்க்குஞ் சமாதியென்ப ரந்தச்
சிவாக்கினியை ஒடுக்காத விதுடவித்து வரர்க்குத்
தரமருவ வக்கினியாற் றகனமீ ரிடத்துந்
தண்டுவு பீனமுடன் சாற்றுதொழில் புரியே."

சமாதிக்குறியோரையும், எரியூட்டப்பட வேண்டிய உடல்கள் எவை என்பதையும் மேற்கண்ட பாடல் வகைப்படுத்துகிறது (Chockalingam, 2014). ஞானியரின் உடலானது இறைவன் குடியிருக்கும் கோயிலாகும். எனவே அதனைச் சமாதி செய்திடல் வேண்டும் என்று மேற்காணும் நூல் பின்வரும் குறுந்திரட்டுப் பாடலை மேற்கோள் காட்டியுள்ளது.

"பரம்பர முணர்ந்திடு ஞானி பாரவர்
விரும்பிய வகைபெற விளங்கு மேனிதா
னரும்பரம் பரமும்வந் தமர்ந்த தாதலாற்
குரம்பையென் றிகழனற் கோயி லென்பவே." (Chockalingam, 2014)

இதையே திருமூலரும், அழிவில்லா ஞானியரின் உடலை சமாதி செய்து வழிபட்டு வந்தால் அந்நாட்டிலுள்ள (மன்னனுக்கான) இலட்சனங்களைக் கொண்டுள்ள மன்னனும், இன்னும் இந்தப் பழைமையான உலகத்தில் வாழ்கின்ற பலகோடி மக்களும் எல்லையில்லா இன்ப அருளைப்பெற்று உயர்வோர் ஆவார்கள் என்று,

"அந்தமில் ஞானி அருளை அடைந்தக்கால்

அந்த உடல்தான் குகைசெய்து இருந்திடில்

சுந்தர மன்னரும் தொல்புவி உள்ளோரும்

அந்தமில் இன்ப அருள் பெறுவாரே."

என்ற பாடலில் கூறுகிறார் (Manikkavasagan, 2008). எனவே சீவன்முத்தர்களாகிய ஞானியரின் உடலை குகைசெய்து, ஆலயம் அமைத்து வழிபடுவது மிகுந்த நற்பலனைத் தரும் எனறு மேற்கண்ட பாடல்கள் வலியுறுத்துகின்றன.

உயிர் உடலோடு ஒடுங்கப்பெற்ற சீவன்முத்தர்களின் உடலில் உயிரோட்டத்திற்கான அறிகுறிகள் இருக்காதெனினும், உயிர்வேறு உடல்வேறாகப் பிரியும் மரணம் நிகழ்வதில்லை என்பது சித்தர்களின் கருத்தாகும். எனவே அவர்களின் உடல்களைக் குகை செய்யும் வழக்கம் ஏற்பட்டது.

ஊனமில் ஞானிநல் யோகியுடல் விட்டால்

தானற மோனச் சமாதியுள் தங்கியே

தானவ னாகும் பரகாயஞ் சாராதே

ஊனமில் முத்தராய் மீளார் உணர்வுற்றே.

நிறைவான ஞானமும் யோகசித்தியும் அமையப்பெற்ற ஞானி உடல் இயக்கத்தினை விட்டால் 'தான்'என்னும் உயிர்த்தன்மை, முனைப்பு விலக மௌன சமாதி நிலையிலேயே இருந்து தானே சிவத்தன்மை பெறுவர். மற்றுமொரு உடலைச் சாராது, மீண்டும் பிறக்காத, குறையேதும் இல்லாத, தவயோக சித்தியில் முழுமைப் பெற்ற விதேக முத்தராவர்" என்று திருமந்திரம் சீவன்முத்தரின் சமாதிநிலையைப் பற்றிக் கூறுகிறது.

ஞானிகளின் உடலை எரியூட்டினால் ஏற்படும் விளைவு

சீவன்முத்தரின் உடலை சமாதிஆலயம் அமைத்து வழிபடவேண்டும் (Manikkavasagan, 2008). அவ்வாறின்றி அவர்களது உடலை போற்றிப் பாதுகாக்காமல் விலங்கினங்களுக்கு உணவாக நேரிட்டாலோ அல்லது எரியூட்டினாலோ அது நாட்டுக்குத் தீய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது ஆகமங்கள் தரும் எச்சரிக்கை ஆகும்.

எல்லையற்ற பரம்பொருளாக விரிந்திருக்கும் ஞானியரின் உடலைத் தீயிலிட்டால் அந்த நாட்டு மக்கள் தகிக்கும் வெப்பத்தீயில், கொடிய வெப்புநோயில் விழுந்து வருந்துவர். ஞானியின் உடல் புதைக்கப்படாது கிடந்து கெட்டுப்போய் நாய் நரிகள் உண்ண நேருமானால், அப்படி நாய்நரி உண்ண இடம்தந்த நாட்டில் உட்பகை மூண்டு நாடே அழியும். நாட்டு மக்களெல்லாம் நாய்நரிக்கு உணவாவர் என்று பின்வரும் திருமந்திரம் பாடலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

"அந்தமில் ஞானிதன் னாகந் தீயினால்

வெந்திடி னாடெல்லாம் வெப்புத் தீயினி

நொந்தது நாய்நரி நுகரில் உண்செரு

வந்துநாய் நரிக்குண வாகும் வையகமே."

மேலும் ஞானியரின் உடலானது இறைவன் குடியிருக்கும் கோயில் என்று கருதப்படுவதால் அதனை எரிப்பது, கோவிலைத் தீயிட்டு எரிப்பதை ஒத்ததாகும் (Manikkavasagan, 2008). அவ்வாறு செய்தால் மண்ணில் மழை பெய்யாது மக்கள் பஞ்சத்தால் துன்புறுவர். வறுமை வாட்டும். அரசர்கள் தங்கள் நாடு நகரிழந்து துன்புருவர் என்று,

"எண்ணிலா ஞானி யுடலெரி தாவிடில்

அண்ணல்தங் கோயில் அழலிட்ட தாங்கொக்கும்

மண்ணில் மழைவிழா வையகம் பஞ்சமாம்

எண்ணரும் மன்னரும் இழப்பார் அரசுமே.”

என்ற பாடல் மொழிகிறது (Manikkavasagan, 2008). இவ்வாறு ஞானியரின் உடலினை எரியூட்டாமல் முறைப்படி சமாதி செய்து வணங்க வேண்டும் என்று சித்தர்மரபு நூல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## சமாதி செய்யப்படும் இடங்கள்

சீவ சமாதியடைந்த சீவன்முத்தர்களின் உடலை சமாதிவைக்கும் இடம் மற்றும் சூழல் எவ்வாறு இருக்கவேண்டும் என்று சைவ ஆகமங்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. சிவாலயங்களின் மதிற்சுவரின் உட்பகுதியிலும், மேலான ஞானியர் வசிக்கின்ற மடங்களிலும், சிறந்த பூங்காவிலும், நல்ல நிலத்தினிலும், நல்ல குருவினுடைய தோட்டத்திலும், குளம் ஆறு இவைகளின் கரைகளிலும், நல்ல மலர்களைத் தருகின்ற பூஞ்சோலைகளிலும், நல்ல காட்டுப்பகுதியிலும், நெடுஞ்சாலை ஓரங்களிலும், பொன் போன்ற சிகரங்களை உடைய மலையடிவாரங்களிலும், இவை போன்ற இடங்களிலும் சமாதி ஆலயங்கள் அமைக்கப்படலாம் என 'சமாதி லிங்கப் பிரதிட்டை விளக்கம்' தெளிவாக விளக்குகிறது (Chockalingam, 2014). இதேக் கருத்தை,

“தன்மனை சாலை குளங்கரை யாற்றிடை

நன்மலர்ச் சோலை நகரினற் பூமி

உன்னருங் கானம் உயர்ந்த மலைச்சாரல்

இந்நிலந் தான்குகைக் கெய்தும் இடங்களே.”

என்று திருமூலர் திருமந்திரத்தில் பதிவுசெய்துள்ளார் (Manikkavasagan, 2008).

## சமாதி அமைப்பு முறை

மேற்கூறப்பட்ட நிலவகைகளுள் ஏதாவது ஒன்றினைத் தேர்ந்தெடுத்து, அவ்விடத்தைப் பசுவின் பால் கொண்டு அத்திரமந்திரம் கூறி சுத்தம்செய்ய வேண்டும். (அத்திராய பட் என்பது அத்திரதேவர் என்னும் ஆயுத தேவரை வணங்கும் மந்திரமாகும்.) பின் வடக்கு முகமாக நின்று அந்நிலத்தை அகழ்ந்திட வேண்டும். மூன்று முதல் ஆறு முழம் வரையில் தோண்ட வேண்டும். ஆழத்தில் பாதியான அகலம் வைத்து அதே அளவு நீளம் வைத்து சதுரமாகத் தோண்ட வேண்டும். முனிவர்களாயின் இரண்டு முள சதுரம் செய்தல் வேண்டும். அதன் உட்பகுதியை கோமயத்தினால் மெழுக வேண்டும். ஆனைந்தினால் சுத்தம் செய்யவேண்டும் என்பது சமாதிலிங்கப் பிரதிட்டை விளக்கம் என்ற நூலில் உள்ள கீழ்காணும் பாடலின் மூலம் அறியப்படுகிறது.

“எடுத்தவுயர் தலந்தன்னிற் கிடைத்ததனை யடைந்தே

யெழிலாவின் பாலினால்த் திரத்தாற்போ ரோக்கித்

தடுத்ததனை யுத்திரத்தின் முகமாய்நின் றகழ்ந்திட்

டாழமுழமூன்றுமுத லாறந்த மாகத்

தொடுத்ததனா ழத்தகலம் பாதிசமை சதுரந்

தொட்டிடுக முனிவோருக் கிரண்டுமுழ மாஞ்சீர்

படுத்ததனைக் கோமயத்தி னான்மெழுகிச் சுத்தி

பஞ்சகவ்வி யத்தானுஞ் செய்திடுதல் பாங்காம்.”

ஆனால் பின்வரும் திருமந்திரப் பாடல்களில் காணப்படும் கருத்துப்படி சமாதி அமைப்பதற்கான அளவு முறைகளில் சிலவேறுபாடுகள் காணப்படுகின்றன (Chockalingam, 2014).

நவமிகு சாணாலே நல்லாழஞ் செய்து

குவைமிகு சூழவைஞ் சாணாகக் கோட்டித்

தவமிகு குகைமுக் கோணமுச் சாணாக்கிப்

பவமறு நற்குகை பத்மா சனமே." (Manikkavasagan, 2008)

என்றும்,

நற்குகை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய்

நிற்கின்ற பாத தவபாதம் நேர்விழப்

பொற்பம ரோசமும் மூன்றுக்கு மூன்றணி

நிற்பவர் தாஞ்செய்யும் நேர்மைய தாமே."

என்றும் திருமந்திரம் கூறுகிறது (Manikkavasagan, 2008). அதாவது குகை அளவினைப் பத்மாசனம் எனப்படும் தாமரை இருக்கையாக அமைத்தல் வேண்டும் என்கிறார். ஆழம் ஒன்பது சாண், அகலம் ஐந்து சாண் என்றதனால், வட்டத்தின் குறுக்களவு ஐந்து சாண் எனவும், அதனுள் மூன்று சாண் பக்கமுள்ள முக்கோணம் எனவும், அடுத்தப் பாட்டில் அவ்வாறு தோண்டி குகையின் மேல்வட்டத்தைச் சுற்றிலும் ஒன்பது அடி அகலமுள்ள சுற்றுப்புறம் இருக்குமாறு அமைத்தல் வேண்டும். நாற்புறமும் இருந்து பஞ்ச அங்கங்களும் தோயுமாறு படிந்து வணங்கத் தக்கதாய் இடமிருத்தல் வேண்டும் என்கிறார். இதனால் கருவறையருகில் அட்டாங்க வழிபாடு செய்தல் ஆகாதென்றும் பலிபீடத்தின் வெளியில்தான் அவ்வாறு வணங்கலாம் என்றும் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்யப்பட்ட குகையில் அதன் மேல் மஞ்சள்தூள் ஆறு கலமும் (1கலம் என்பது 96 படி) திருநீறு ஆறு கலமும், அதன்மேல் பத்து பாரம் (ஒரு பாரம் என்பது 224கி.கி) உப்பும் இட்டு, பஞ்சலோகம் மற்றும் நவமணிகளையும் இட்டு, அதன்மேல் தர்ப்பை புற்களை பரப்ப வேண்டும். கமலாசனமாக ஞானியை வைக்கவேண்டும். இவ்வாறு வைக்கப்பட்ட சமாதியின்மேல் அசைவிலா இலிங்கம் அமைக்க முடிவு செய்திருந்தால் ஞானியின் முகம் கிழக்கு அல்லது மேற்காகவும், ஞானியைப் போல உருவம் சமைத்துவைக்க முடிவு செய்திருப்பின் முகம் வடக்கு நோக்கி இருக்குமாறும் உட்கார வைக்கவேண்டும் என்று பின்வரும் சமாதி லிங்கப் பிரதிட்டை பாடல் விளக்குகிறது.

"இக்குகையி னாதிதனி னீராறு பார

மிட்டிகையின் பொடியிடுக விதன்மேன்மஞ் சட்டூட்

டக்கவறு கலநீறு தானுமறு கலமேற்

றசபார முப்புநவ மணிகமலா சனமேல்

மிக்கதிர லிங்காதி பின்புதாவிப் போன

மெய்ஞானி முகங்கிழக்கு மேற்காக வைக்கப்

புக்கவன் போலவுருத் தாபிக்க வேண்டிற்

பொருள்வட பால்வதனம் பொருந்தவிருத் துகவே."

பூசனைக்குரிய ஞானியின் திருவுருவை அந்த ஞானியின் சீடர்கள் முதலானவர்கள் கடைசியாகத் தரிசித்தப் பின்னர் அழகிய புதிய துணியால் முழுவதுமாக மூட வேண்டும் (Chockalingam, 2014). பின்னர் ஆனைந்தினால் தூய்மை செய்து உடலைச் சுற்றிலும் ஒருமுழ அகலத்திற்கு நல்ல நினைவோடு சேகரித்த உப்பினுடன் நல்ல வண்ணமுள்ள அழகான மஞ்சளின் சிவந்த தூள் சமமாகக் கலந்து தூய்மையான உப்புக் கொண்டு அழுந்தச் செய்ய வேண்டும். பின் வில்வமிட்டு அத்துடன் சந்தனம் முதலான நறுமணப் பொருட்களை இடவேண்டும் என்று பின்வரும் திருமந்திரம் கூறுகிறது.

"நள்குகை நால்வட்டம் படுத்ததன் மேல்சாரக்

கள்ளவிழ் தாமங் களபம் கத்தூரியுந்

தெள்ளிய சாந்து புனுகுபன்னீர் சேர்த்

தொள்ளிய நற்றூபம் உவந்து இடுவீரே."

இவையாவுமிட்டு நிறைவு செய்த பின் முடிவில் ஒருமுளம் மண்கொண்டு அழுந்திட மூடி நிரப்ப வேண்டும். அதன்மேல் முக்கோண பீடம் செய்து, அதன் மூன்று முனைகளும் சந்திக்குமாறு வட்டபீடம் செய்து, அதன்மேல் சமசதுரமாக மண் கற்கள் கொண்டு செய்து, அதன் நடுவின்மேலே வணங்கத்தக்க மண்ணின் சாரத்தினாலே கணலிங்கம் எனப்படும் மானசீக லிங்கபீடம் அமைத்தல் வேண்டும். அதனை அவரது மகனாவது, சீடனாவது, அவரிடத்தில் அன்புடையோராவது 70நாட்கள் வழிபட வேண்டும் என்று சமாதி லிங்கப் பிரதிட்டை கூறுகிறது (Manikkavasagan, 2008). ஆனால் நடைமுறையில் 1மண்டலமாகிய 48நாட்கள் வழிபடுவது வழக்கம் உள்ளது.

## ஞானிகளுக்கு பிண்டோதகக் கிரியை தீட்டு இல்லை

நல்ல சிவஞானத்தாலும், சிவயோகத்தாலும், சிவதரும நெறியாலும், மேலான தவத்தாலும், புலனடக்கமுடைமையாலும், தீக்கை சிறப்பினாலும், அளவிறந்த பக்தி வைராக்கியத்தாலும், எல்லையற்ற அன்பாலும், இல்லறத்தை முற்றும் துறந்ததாலும் சிறந்து விளங்கும் வீடுபேற்றை அடைந்ததால் அத்தகு ஞானியரின் இறுதிச் செயலில் கலந்துகொண்டவர்கட்குத் தீட்டில்லை. எனவே நீராட வேண்டியதில்லை. அந்த ஞானிகளுக்கு செய்யவேண்டிய பிண்டோதகக் கிரியை இல்லை. திவசம் கொடுப்பதில்லை. நெருப்புக் காரியங்களில்லை என்று 'சமாதி லிங்கப் பிரதிட்டை'யின் பின்வரும் பாடலில் கூறுகிறது.

"நல்லசிவ ஞானத்தால் யோகத்தான் மனுவா

னற்றவத்தா லெதித்திறத்தாற் றிக்கைவி சேடத்தாற்

சொல்லரிய பத்திவயி ராக்கியத்தா லன்பாற்

சுசாதியுத் தாரணம்வரத் துறந்தோர்வீடடைந்தா

வில்லையாஞ் சாதிநானமு மேயில்லை யேற்ற

பிண்டோ தகக்கிரியை சிராத்தமுமங் கில்லை

யல்லறரு மழுகைமுத லானவெல்லா மில்லை

யக்கினியு மில்லையங்குட் டப்பிணிப்பு மில்லை."

ஞானியரின் உடலுக்கு பீடம் ஆலயம் போன்றவை எழுப்பி பூசைசெய்து வழிபடவேண்டும். அதுவல்லாது அவர்களுக்கு பிண்டோதகக் கிரியை செய்ய வேண்டாம் என்று குறுந்திரட்டுப் பாடல் பின்வருமாறு கூறுகிறது (Chockalingam, 2014).

"யாது செய்வதிக் கோசமென் றுரைசெயி லிலங்கிய மூவர்க்கு

மாதி சொல்லிய பரிசிலே யருச்சனை செய்தது கணித்தங்கோர்

போதிற் பீடமா லயமியன்றது செய்து பூசைசெய் தடிபோற்றி

யீது செய்வதல் லாதுபிண் டோதகக் கிரியைசெய் திடவேண்டா."

எனவே சீவன்முத்தி அடைந்து உயிர்ஒடுக்கம் பெற்ற ஞானிகளின் உடலை இறைவன் குடியிருக்கும் ஆலயமாகக் கருதி பூசைசெய்து வணங்குவதால் மரணமடைந்தவர்களுக்குச் செய்யும் இறுதிச் சடங்குகளும் மற்ற கிரியைகளும் செய்யவேண்டாம் என்பது ஆகமங்களின் முடிவாகும் (Chockalingam, 2014).

## சமாதி ஆலயங்களில் ஆற்றல்களம்

சீவன்முத்தர்கள் விதேகமுத்தி அதாவது இந்த உடலோடு உயிர் ஒடுக்கம்பெற்று, உடலானது தனது இயக்கத்தை நிறுத்திக்கொள்ளும் நிலையை அடையும்போது அவர்களுடைய சீவகாந்த ஆற்றலானது மேலும் விரிவடைந்து உடலிலேயே நிலைப்பெறுகிறது.

"சாகாமல் செத்து சத்குருவின் பொன்னடிக்கீழ்

வேகாமல் வெந்திருக்க வேண்டுவதும் எக்காலம்"

என்ற பத்ரகிரியாரின் எக்காலக்கண்ணியும் உயிர் உடலைப் பிரியாத நிலையையே குறிக்கிறது (Govindhan, 2003). இந்நிலை பற்றி உலக அறிவார்ந்தோர் இயற்கை ஞானசபைத்தலைவர் தங்கசுவாமிகள் தனது 'அகத்தேடலில்' என்ற நூலில் "உடல்வேறு உயிர்வேறு பிரிந்த நிலையே மரணநிலையாகும். இந்த உடலோடு உயிர் இரண்டறக் கலந்து ஐக்கியமான நிலைதான் அமரநிலையாகும். இதைத்தான் அய்யன் திருவள்ளுவர் 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்றார். அப்படி அடங்காதவர்கள், உடல்வேறு உயிர்வேறு பிரிந்தவர்கள், நல்லவர்களாக இருப்பின் நல்லவர்களாகவும், நல்லவர் அல்லாதவர்கள் தீயவரர்களாகவும் பிறந்து, பிறவி என்னும் இருளில் கிடந்து உழல்வர் என்பதையே 'அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்' என்று அன்றே ஈரடியில் சொல்லிவைத்தார். சீவன்முத்தர்களின் உடலை சமாதி செய்து காப்பாற்றிவந்தால் அந்த இடம் ஓர் அருள்பேராற்றல் களமாக அமையும்" என்று கூறியுள்ளார் (Thanga Swamigal, 2015).

வேதாத்திரி மகரிசி அவர்கள் உயிர் ஒடுக்கம்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார். "உயிர் தாங்கியான வித்துவைப் போதிய அளவு கெட்டி செய்துவிட்டால் உயிர் பிரியாது. உயிரை உடலிலேயே நிலைக்கச் செய்யலாம். வாழ்ந்தது போதும் என்ற நிறைவு ஏற்படும்போது மன இயக்கத்தை மாத்திரம் நிறுத்திக்கொள்ளலாம். உடலியக்கம் மன இயக்கம் நின்றுவிட்டப் பின்னர் உடலிலேயே உயிர் அடக்கம் பெற்றிருக்கும் நிலைதான் சீவசமாதி என்றும் மரணமில்லாப் பெருவாழ்வென்றும் பலர் கருதி வந்திருக்கிறார்கள்.

உயிர் பிரியாத உடலைப் பெற்று சீவசமாதி அடைந்தவர்களுக்கு ஓர் அடையாளம் உண்டு. உடலை எத்தனை ஆண்டுகள் வைத்திருந்தாலும் அது கெடாது. அத்தகையவர்கள் உடலை புதைத்து அதன்மேல் ஏதேனும் சிலைவைத்து அதனை வழிபடுவது வழக்கமாயிற்று."

மேலும் தாயுமானசுவாமிகளும் தமது பராபரக்கண்ணியில்,

"கால்பிடித்து மூலக்கனலை மதிமண்டலத்தின்

மேலெழுப்பில் தேகம் விழுமோ பராபரமே"

என்று குண்டலினி ஞானத்தின் சிறப்பினைக் கூறுகிறார் (Thayumanaswami, 2008). கால் என்றால் காற்று என்று பொருள். அதாவது பிராணன் எனப்படும் உயிர்காற்றினை தொடர் பயிற்சிகளின் மூலம் மேல்நோக்கி மதிமண்டலம் எனப்படும் தலையின் மையப்பகுதியாகிய உயிர் உதித்த இடத்திற்கு எடுத்துச்செல்லும் ஆற்றல் பெற்றுவிட்டால் இந்த உடல் விழுமோ? விழாது. அதாவது அழியாது என்று குறிப்பால் உணர்த்துகிறார். உயிர் உடலைவிட்டு பிரிந்தால் உடல் அழிந்துவிடும். உயிர் பிரியாமல் உடலோடு ஒடுங்கினால்தான் தேகம் விழாது என்று கூறுகிறார். மேலும் சாதாரண மனிதர்களின் மரணத்தில் அவர்களின் உயிர்க்காற்று உடலைவிட்டுப் பிரியும்போது ஏற்படும் அழுத்தத்தால் மலம், சிறுநீர் மற்றும் விந்து எனப்படும் உயிரணுக்கள் ஆகியவை வெளியேறும். சில மணிநேரங்களில் செல்கள் அழுகத் தொடங்கும். அதனால் துர்நாற்றம் வீசத்தொடங்கிவிடும். ஆனால் முக்திநிலை அடைந்த சித்தர்களின் உடலில் அத்தகைய மாற்றங்கள் இருக்காது. மேலும் நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

"சீவன்முத்தர்கள் அடக்கம் பெற்றுள்ள சீவசமாதிகளில் ஓர் ஆற்றல்களம் இருப்பதனை குண்டலினி ஞானப்பயிற்சியில் ஈடுபட்டு சீவகாந்த ஆற்றலைப் பெருக்கிக் கொண்டிருப்பவர்கள் எளிதாக உணர்ந்து கொள்ளமுடியும். நல்ல ஆற்றல் களம் உள்ள சமாதி ஆலயங்களில் மனஅமைதி கிடைப்பதை

அங்கு சென்று வழிபடும் சாதாரண மக்களும் உணர்கிறார்கள்" என்பது பேராசிரியர் மணிராம் குமார் (அறங்காவலர்-சங்கரசுவாமிகள் ஒடுக்கம், திருச்செந்தூர்) அவர்களின் கூற்று. இந்த ஆற்றல் களமானது இந்தியாவில் மட்டுமல்லாது உலகமெங்கிலும் காணப்படும் சமாதி ஆலயங்களிலும் சமய வேறுபாடுகளைக் கடந்து ஒன்றுக்கொன்று நிகராகக் காணப்படுவதாக மீ.ப. சோமு அவர்கள் தமது சித்தர் இலக்கியம் ஆய்வு நூலில் பின்வருமாறு கூறுகின்றார்.

"எல்லா மொழியினருக்கும் எல்லா மதத்தினருக்கும் எல்லா நாட்டினருக்கும் உடம்பும் உள்ளமும் ஒரே பாங்கில் அமைந்திருப்பதால், தமிழகத்துச் சித்தர்கள் கூறும் ஞானமே மேல்நாட்டு ஞானியர் கூறும் ஞானமாகவும் அமைந்திருக்கிறது. சான்றாக ரோம் நகரத்திலே வாட்டிகன் தலைநகரத்தில் உள்ள புனித பீட்டர் தேவாலயத்தின் உள்ளே நுழைந்தால் பீட்டர் முனிவருடைய சிலையும், அந்தக் கருவறையிலிருந்துக் கிளம்புகின்ற ஞான அலைகளும் தமிழ்நாட்டிலுள்ள சித்தர்களின் சீவ சமாதியையே நினைவூட்டுவனவாக அமைந்திருப்பதை நான் இத்தாலி சென்றிருந்தபோது நேரிலே கண்டேன்" (Shomu, 2004).

மீ.ப.சோ. வின் மேற்கண்ட கருத்தை உறுதிசெய்யும் வகையில் "சமாதிஆலயத்தில் ஏற்றத் தாழ்வில்லை எல்லாத் தலங்களுமே மேலானதென்று ஆகமங்கள் கூறுகின்றன. இதனை கனனவிதி-13ம் பாடல் சிறப்பிக்கின்றது" என சமாதிலிங்கப் பிரதிட்டை விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது (Chockalingam, 2014).

இத்தகைய ஆற்றல் களங்களை உள்நாட்டினர் மட்டுமல்லாது வெளிநாட்டு அன்பர்களும் அறிந்து அங்குசென்று தன் சீவகாந்த ஆற்றலைப் பெருக்கிக்கொள்கின்றனர். அத்தகைய இடங்களுக்குச் சென்று அமர்ந்து தியானம் செய்வதை திருவண்ணாமலை ரமணாஸ்ரமம், பாண்டிச்சேரி அரவிந்தர் ஆஸ்ரமம் போன்ற இடங்களில் நாம் எப்பொழுது சென்றாலும் காணமுடிகிறது. இந்த சமாதி ஆலயங்களிலிருந்து வெளிப்படும் பேராற்றலானது தியான அனுபவமற்றவர்களுக்கு அவர்கள் அறிந்திராத மன அமைதியைத் தருகிறது. தியான அனுபவம் உள்ளவர்களுக்கு ஆழ்நிலை தியான அனுபவத்தைத் தருகிறது. மேலும் அள்ள அள்ளக் குறையாத, பன்மடங்காகப் பெருகும் ஆற்றல் களங்களாக திகழ்கின்றன என்பது அனுபவ உண்மை ஆகும்.

## முடிவுரை

உலகமெங்கும் சமாதி ஆலயங்கள் பரவலாகக் காணப்பட்டாலும் உலகின் ஆன்மீக மையமாகிய நம் பாரத தேசத்தில் குறிப்பாக தமிழகத்தில் சமயங்களைக் கடந்த சித்தர்கள் மற்றும் ஞானியரின் ஒடுக்கம் பெற்ற சீவசமாதி ஆலயங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. புகழ்பெற்ற ஆலயங்கள் பலவற்றுக்குள்ளும் சித்தர்களின் சீவசமாதி ஆலயங்கள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. சமாதி ஆலயம் யாருக்கு அமைக்கவேண்டும், எவ்வாறு அமைக்கவேண்டும் என்பது பற்றி சித்தர் நூல்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சீவ சமாதி ஆலயங்களில் காணப்படும் பேராற்றல், மெய்ஞானத் தொடர்பில்லாத எளிய மக்களுக்கு தங்கள் குறைகளைக் களைந்து மனநிம்மதி தரும் கோவிலாக உள்ளது. குண்டலினி ஞானப்பயிற்சி மேற்கொள்ளும் சாதகனுக்கு பேராற்றலை அள்ளி வழங்கும் ஒரு ஆற்றல் களமாகக் காணப்படுகிறது. அதுபற்றி பல அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். ஆய்வுநூல்களும் வெளிவந்துள்ளன. அத்தகைய சிறப்பு வாய்ந்த சமாதி ஆலயங்களைப் பாதுகாப்பதும் முறையான பராமரிப்பு செய்து அனைவரும் பயன்பெறச்செய்வதும் மெய்ஞானத்தேடல் கொண்ட அனைவருக்கும் கடனாகும்.

## References

Chockalingam, V., (2014) Samadhi Lingam Prathishta Villagam, Sarasvati Mahal Library, Thanjavur, India.

Govindhan, K., (2003) Siddhar Padalgal, Paavai Publications, Chennai, India.

Manikkavasagan, G, (2018) Tirumular Tirumantiram, Uma Pathippagam, Chennai, India.

Ramalinga Swamigal, (2019) Thiruvarutpa, Prema Pathippagam, Chennai, India.

Shomu, M.P., (2004) Siddhar Ilakkiyam, Annamalai University, Chidabaram, India.

Thanga Swamigal, (2015) Agatheydalil, Ulaga Arivaarnthor Iyarkai Gnana Sabia, Sivathaiyapuram, India.

Thayumanaswami, (2008) Sri Thayumanaswami Padalgal, Sri Ramakrishna Tapovanam, Thirupparaithurai, India.

Thiruvalluvar, (2018) Thirukkural, Vanitha Pathippagam, Chennai, India.

Tholkappiyar, (2005) Tholkappiyam Porulathikaram, Tamil Nadu Open University, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License